Women's Fund Asia

ஆசிய பெண்கள் நிதியம்
Women Fund Asia (WFA)

நிதியுதவி பற்றி அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

'பெண்ணிலைவாத தலையீடுகள்' என்பதால் நீங்கள் கருதுவது யாது?

பெண்ணிலைவாத கொள்கைகளின் அடிப்படையில் அமைந்த தலையீடுகளை நாங்கள் ஆதரிக்கின்றோம் இது சமத்துவமின்மை, பாரபட்சம் மற்றும் அதிகாரம் என்பவை தொடர்பில் கேள்வி கேட்கும் மேலும் பெண்கள் மற்றும் மாற்றுப்பாலினத்தவர்களின்மூ செயலாளுமை, தலைமைத்துவம், சுயாதீனம், மற்றும் தீர்மானம் எடுத்தல் ஆகியவற்றின் அடிப்படைக்கூறுகளைக் கொண்டிருக்கும். பெண்கள் மற்றும் மாற்றுப்பாலினமூ சமூகங்களின் உரிமைகளை மறுப்பதுடன் அவர்களை பிரதிகூலத்துக்குள்ளாக்குகின்ற, வரலாற்று மற்றும் நிறுவனரீதியான பாரபட்சத்தையும், விளிம்புநிலைக்குத் தள்ளும் நடைமுறையினையும் பெண்ணிலைவாத தலையீடுகளாவன சவாலுக்குட்படுத்துகின்றன.

'உரிமைகள்சார் திட்டமிடல்' என்பதால் கருதுவது யாது?

உரிமைகள்சார் நிகழ்ச்சித்திட்டம் என்பதானது எம்மத்தியிலுள்ள மனித உரிமைகள் சட்டகங்களின் அடிப்படைக்கூறுகளை உள்ளடக்குவதாகும். அதாவது நிறுவனமானது பெண்களதும், மாற்றுப்பாலினத்தவர்களதும்மூ உரிமைகளை தனது திட்டங்களின் மையமாக வைத்திருத்தலும், அவர்களது குரல்கள், தலைமைத்துவம், தீர்மானம் எடுத்தல் என்பன திட்டங்களின் அத்தியாவசிய பகுதிகளாக இருத்தலுமாகும். உரிமைகள்சார் அணுகுமுறைக்கான சட்டகமானது பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியிருக்கும்: உரிமைகளை அங்கீகரித்தல்: உரிமைகளை அமுலாக்கல்: மீறல்களின் போதான உரிமை மற்றும் நிவாரணத்துக்கான கோரிக்கைகள்: நிலைபேறான பெறுபேறுகளை உருவாக்கல் மற்றும் உரிமைகளின் பரிணாம வளர்ச்சி.

நிறுவன இயங்குதலுக்கான பொது நிதியுதவி என்பது யாது?

நிறுவன இயங்குதலுக்கான பொது நிதியுதவி அல்லது அடிப்படை நிதியுதவி என்பது உங்களது நிறுவனத்திலுள்ள பல்வேறுபட்ட நிதிப் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்காக நீங்கள் கோரக்கூடிய ஒரு நிதியுதவி வகையாகும். இந்த ஆதரவானது கட்டாயமாக 'திட்டங்களுடன்' தொடர்புடையனவாகத்தான் இருக்க வேண்டும் என்பதல்ல. இதன் அர்த்தமாவது, ஊதியம், வாடகை, உபகரணங்கள், போக்குவரத்து, அலுவலக பராமரிப்பு, கணக்காய்வு, ஏனைய சட்ட மற்றும் நிதி கடப்பாடுகளுக்கான செலவுகள், நிறுவனம்சார் இயல்தகைமைகளைக் கட்டியெழுப்பல், மூலோபாய அபிவிருத்தி போன்ற நிறுவனத்தை நடாத்துவதற்குத் தேவையான அடிப்படை செலவுகள் போன்ற உங்களுடைய நிறுவனரீதியான, நிர்வாகரீதியான மற்றும் நடாத்துகைக்கான செலவுகளுக்கான உதவிக்குக் கூட நீங்கள் எங்களுக்கு விண்ணப்பிக்கலாம். அதே சமயம், இந்த நிதியுதவியானது நடைமுறையிலிருக்கும் உங்களது நிகழ்ச்சித்திட்டங்கள், முயற்சிகள் மற்றும் ஒருங்கிணைவுகளுக்கும் ஆதரவளிக்கக் கூடியதாகும்.

நிறுவன இயங்குதலுக்கான பொது நிதியுதவிக்கு விண்ணப்பிக்கையில், நீங்கள் இதன் பகுதியை நிர்வாகத்துக்காகவும் இன்னுமொரு பகுதியை நிகழ்ச்சித் திட்ட அனுசரணைக்குமாக: அல்லது தனியே நிர்வாகத்துக்கானதாக அல்லது நிகழ்ச்சித்திட்டத்துக்கானதாகக் கோர முடியும். நிறுவன இயங்குதலுக்கான பொது நிதியுதவியானது நிறுவனங்களுக்கு எங்கே நிதித் தேவை எழுகின்றது என்பதனையும், அந்த இடைவெளிகளை நிரப்ப எங்கு நிதியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனையும் தீர்மானிப்பதில் ஒரு நெகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.

நிறுவன இயங்குதலுக்கான பொது நிதியுதவியினை வழங்கும் அதேவேளை, நிறுவனத்தின் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள்/ திட்டங்கள் பற்றி அல்லாமல் உங்களது ஒட்டுமொத்த வேலை, மூலோபாயங்கள், மற்றும் எதிர்பார்க்கின்ற பெறுபேறுகள் பற்றிய தகவல்களைத் தரும்படி ஆசிய பெண்கள் நிதியமானது உங்களைக் கேட்டுக் கொள்கிறது.

மாற்றுப்பாலினத்தவர்கள்மூ (Transgender*) என்பதில் உள்ளடங்குவோர் யாவர்?

மாற்றுப்பால்நிலை என்பது பல்வகைப்பட்ட பால்நிலை அடையாளங்களையும், பல்வகைப்பட்ட பால்நிலை வெளிப்படுத்தல் முறைகளையும் உள்ளடக்கிய ஒரு அடையாளச் சொல்லாகும். தங்கள் பிறப்பின்போது குறித்தொதுக்கப்பட்ட பால் என்பதிலிருந்து பால்நிலை அடையாளமானது வித்தியாசப்படும் மக்களை வர்ணிக்க இச்சொல் பாவிக்கப்படுகின்றது. ஆசிய பெண்கள் நிதியமானது 'மாற்று' (Trans*) என்பதனை ஒரு

[1] Computer – desktop and laptop, Hard drives, printer, scanner, photocopier and cameras.
[2] Asia Pacific Transgender Network, Transgender Day of Remembrance 2015: http://www.weareaptn.org/wp-content/uploads/2017/10/transgender-day.pdf

நட்சத்திரக்குறியோடு ஏற்றுக் கொள்கின்றது. இது சாத்தியமாகக் கூடிய அனைத்து பால்நிலை அடையாளங்களும் மாற்றுப்பால்நிலை என்பதன் பரந்த வரைவிலக்கணத்தின் கீழ் வரும் என்பதனைக் குறிக்கின்றது.

எனது குழுவில் அனைவரும் பெண்கள்/ மாற்றுப்பாலினத்தவராய் இருக்கும் அதேவேளை எனது பணிப்பாளர் சபையானது இந்தத் தேவையை பூர்த்தி செய்யவில்லை எனின் எனது நிறுவனம் நிதியுதவிக்குத் தகுதி பெறுமா?
ஆசிய பெண்கள் நிதியத்தின் ஆணையானது பெண்கள் /மாற்றுப்பாலினத்தவரால் வழிநடத்தப்படும் நிறுவனங்களுக்கும், முயற்சிகளுக்கும் ஆதரவளிப்பதாகும். இதன் அர்த்தமானது, உங்களுடைய நிறுவனமானது பெண்கள் மற்றும் மாற்றுப்பாலினத்தவரின் உரிமைகளுக்காக வேலை செய்வதனை நோக்காகக் கொண்டது எனின், நிறுவன குழு, பணிப்பாளர் சபை ஆகிய இரண்டிலும் 75% பெண்கள்/ மாற்றுப்பாலினத்தவரின் பிரதிநிதித்துவம் காணப்படல் வேண்டும். இத்தேவையை பூர்த்தி செய்யாத நிறுவனத்திற்கும், சில தீவிரமான தலையீடுகளுக்காக ஓரளவு நெகிழ்வு காட்டப்படலாம் எனினும் இவை மிகவும் மட்டுப்படுத்தப்பட்டவை என்பதுடன் முற்றாக குறித்த தலையீட்டின் தன்மையிலும், அத்தலையீடு செய்யப்படவிருப்பதன் அரசியல் பின்னணியிலும் தங்கியிருக்கிறது.

எனது நிறுவனத்தின் பணிப்பாளர் சபையிலும், குழுக்களிலும் அனைவரும் பெண்களாய் இருக்க, நிறைவேற்றுப் பணிப்பாளர் மாற்றுப்பாலினமல்லாத ஒரு ஆணாக இருந்தால் எனது நிறுவனம் நிதியுதவிக்கு தகுதி பெறுமா?
துரதிஸ்டவசமாக, இல்லை. ஏற்கனவே விளக்கமளிக்கப்பட்டது போன்று ஆசிய பெண்கள் நிதியமானது தீர்மானம் எடுக்கும் மட்டங்களில் பெண்கள் மற்றும் மாற்றுப்பாலினத்தவர் இருக்கும் குழுக்களையே ஆதரிக்கின்றது. சில தீவிரமான தலையீடுகளுக்கான சில நெகிழ்வுத் தன்மை காட்டப்படலாம். ஆனால் மிகவும் அரிதாக ஒவ்வொரு தனிப்பட்ட சம்பவத்தினதும் அடிப்படையிலேயே இது செய்யப்படுகின்றது.

நாங்கள் இதுவரை எந்தவொரு நிதியும் பெற்றிராதவொரு புதிய நிறுவனம் எனின், நாங்கள் விண்ணப்பிக்க முடியுமா?
ஆசிய பெண்கள் நிதியமானது புதிய முயற்சிகள்/ குழுக்கள் விண்ணப்பிப்பதனை வரவேற்கின்றது.

நாங்கள் முன்னர் ஆசிய பெண்கள் நிதியத்திற்கு ஒரு நிதியுதவிக்காய் விண்ணப்பித்திருந்தோம். ஆனால் நிதி கிடைக்கவில்லை. நாங்கள் மீண்டும் விண்ணப்பிக்கலாமா?
தயவு செய்து நீங்கள் ஆசிய பெண்கள் நிதியத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிருக்கின்றீர்களா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். ஆம் எனின், தயவு செய்து மீண்டும் விண்ணப்பியுங்கள்!

நாங்கள் பதிவு செய்திருந்தால்தான் விண்ணப்பிக்க முடியுமா?
தயவு செய்து விண்ணப்பிக்க முன்னர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். விண்ணப்பிக்க உங்களுக்குள்ள சாத்தியங்கள் பற்றி ஆராயலாம்.

ஆசிய பெண்கள் நிதியத்தின் நிதியுதவியின் தொகையும், காலஎல்லையும் யாது?
ஆசிய பெண்கள் நிதியத்தின் நிதியுதவியின் கால எல்லை 6 மாதங்கள் முதல் 1 வருடம் வரையானதாகும். நீங்கள் முதல் தடவையாக நிதியுதவியைப் பெறுகின்றீர்கள் எனின் 5000-7000 வரையான அமெரிக்க டாலர்களை நிதியுதவியாகப் பெறுவதனை எதிர்பார்க்க முடியும். எங்களது நீண்ட கால (ஒரு வருடத்துக்கு மேலான) பங்காளர்கள் அண்ணளவாக 10,000 அமெரிக்க டாலர்கள் வரையாக நிதியொதுக்கப்படலாம். தனிநபர் நிதியுதவியானது 5000 அமெரிக்க டாலர்களுக்கு மேற்பட முடியாது.

தனிநபர்கள் விண்ணப்பிக்க முடியுமா?
ஆம், தனிநபர்கள் விண்ணப்பிக்க முடியும். நாங்கள் இந்த நிதியுதவியினை விண்ணப்பத்தின் தன்மையினதும் மற்றும் பரந்த அடிப்படையில் இந்த வேலை எவ்வாறு பெண்களதும், மாற்றுப்பாலினத்தவரதும் இயக்கங்களுடன் பொருத்தப்பாடுடையதாய் இருக்கின்றது என்பதன் அடிப்படையிலும் வழங்குகின்றோம். எவ்வாறாயினும், நாங்கள் நிறுவனம்சார் மற்றும் திட்டங்கள்சார் நிதியுதவிக்கு முன்னுரிமை அளிக்கின்றோம்.

இந்த நிதியுதவிக்கான அழைப்புக்கு அப்பால் நாங்கள் ஆசிய பெண்கள் நிதியத்திற்கு விண்ணப்பிக்கலாமா?
ஆசிய பெண்கள் நிதியமானது ஒவ்வொரு வருடமும் பெண்ணிலைவாத இயக்கங்களை பலப்படுத்துவதற்கான விண்ணப்பங்களைக் கோருகின்றது. வளங்களின் நிலைமையைப் பொறுத்து சிலவேளை வருடத்தின் மூன்றாவது காலாண்டில் இரண்டாவதாகவொரு அழைப்பும் விடுக்கப்படலாம். இவ்வழைப்புகளுக்கு வெளியேயான விண்ணப்பங்கள் கருத்திலெடுக்கப்படமாட்டாது. ஆசிய பெண்கள் நிதியத்தின் கீழ் இதற்குள்ள ஒரேயொரு விதிவிலக்கானது இயல்தகைமைகளைக் கட்டியெழுப்புவதற்கான நிதியமாகும். இது வருடத்தின் எந்த நேரத்திலும் விண்ணப்பிக்கப்படலாம் என்பதுடன், போக்குவரத்து, ஆய்வு, முக்கியமான வெளிகளுக்கான மற்றும் ஆதரித்து வாதிடல் என்பவற்றுக்கானதையும் உள்ளடக்குகின்றது. இதற்கான தகவல்கள் எமது வலைப்பக்கத்தில் உண்டு. ஆசிய பெண்கள் நிதியத்தின் அடுத்த, தென்பூகோளத்தின் முன்னோடி நிகழ்ச்சித் திட்டமானது 2018 ஐப்பசி (ஒக்டோபர்) மாதம் அழைப்பு விடுக்கப்படும் என்பதனை தயவு செய்து கவனத்தில் கொள்க.

எங்களது ஆண்டுக்கான நிதித்திட்டமானது 50,000 அமெரிக்க டாலர்களுக்கும் அதிகம் எனின் எங்களுக்கு இதற்கு விண்ணப்பிக்க தகைமையுண்டா?
ஆசிய பெண்கள் நிதியத்தின் பெண்ணிலைவாத இயக்கங்களை பலப்படுத்தலுக்கான திட்டமானது களமட்டதில் வேலை செய்கின்ற, நிதிக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகுதலைக் கொண்ட குழுக்களுக்கானதாகும். ஆண்டுக்கான நிதித்திட்டமாக 50,000 அமெரிக்க டாலர்களுக்கு அதிகமாகப் பெற்றுக் கொள்ளும் குழுக்கள் இந்தத்திட்டத்தின் கீழ் வருவதற்கான தகைமையைப் பெற்றுக் கொள்ள மாட்டாது.

இந்த நிதியுதவி வட்டத்துக்குள்ளான விண்ணப்பத்துக்குள் எனது நாடு உள்ளடங்குமா?
தற்போதைய இந்த அழைப்பானது பங்களாதேசம், இந்தியா, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கானதாகும்.

ஒரு நிதியுதவி வட்டத்துக்குள் ஒன்றுக்கு மேற்பட்ட நிதியுதவிக்காக விண்ணப்பிக்க முடியுமா?
இல்லை, ஒரு நிதியுதவி வட்டத்துக்குள் ஒரு குழுவானது ஒரு விண்ணப்பத்தை மட்டும் செய்தல் விரும்பத்தக்கது. எவ்வாறெனினும், ஒரு குழுவானது மற்றொரு நாட்டு அல்லது பல பிராந்திய குழுக்களைச் சேர்ந்த ஏனைய குழுக்களுடன் ஒருங்கிணைவதன் ஓர் அங்கமாக ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களைச் செய்ய முடியும்.

ஆசிய பெண்கள் நிதியமானது அவசரகால நிதியுதவியைச் செய்யுமா?
இல்லை, ஆசிய பெண்கள் நிதியம் அவசரகால நிதியுதவியைச் செய்யாது. எவ்வாறாயினும், எங்களை நாடுவதில் தயக்கம் வேண்டாம். இதற்கான நிதி மூலங்களை வழங்குவோருடன் தொடர்புகளை ஏற்படுத்த மற்றும் /அல்லது தேவையான தொழில்நுட்ப உதவிகளை அளிக்க எம்மாலான சிறந்ததைச் செய்வோம்.

ஆசிய பெண்கள் நிதியம் எதற்கு முன்னுரிமையளிக்கின்றது: பழைய பங்காளர்களுக்கா அல்லது புதிய நிதியுதவிகளுக்கா?
ஏனைய அனைத்து நிதி வழங்கும் குழுக்களுக்கு உள்ளது போன்று, ஆசிய பெண்கள் நிதியத்திற்கும் இதுவொரு சவாலாகும். இதற்கான பிரதான காரணம் வரையறுக்கப்பட்ட வளங்களாகும். WFA, ஆனது ஏற்கனவே இருந்து வருகின்ற பங்காளர்களுக்கு குறிப்பிட்ட காலம் வரைக்குமான நிலைபேறான ஆதரவினை அளிக்கின்ற அதேசமயம் ஒவ்வொரு வருடமும் புதிய பங்காளர்களை இணைத்துக் கொள்வதனையும் கருத்தில் எடுத்து செயற்படுகின்றது. ஒவ்வொரு நிதியுதவி வட்டத்தின் போதும் எம்மிடமிருக்கின்ற வளங்களை புதிய மற்றும் ஏற்கனவேயிருக்கின்ற பங்காளர்கள் மத்தியில் ஒதுக்குவதற்கான கடினமான தீர்மானத்தை நாம் எடுக்கின்றோம். உதாரணமாக, கடந்த நிதியுதவி வட்டத்துள் 40% நிதியுதவி ஏற்கனவேயிருந்து வருகின்ற பங்காளர்களுக்கும், 60% புதியவர்களுக்கும் வழங்கப்பட்டது.

எனது விண்ணப்பம் பற்றிய தீர்மானத்தை அறிய நான் எவ்வளவு காலம் காத்திருத்தல் வேண்டும்?
விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு கிழமைக்குள் தங்களது திட்டமுன்மொழிவு கிடைக்கப் பெற்றிருப்பது பற்றி அறிவிக்கப்படும். தொழில்நுட்ப வகையறாவுக்குள் வர முடியாமற் போன குழுக்களது அறிவிப்பானது, இவ்விண்ணப்ப அறிவிப்பின் இறுதியிலிருந்து 3 கிழமைக்குள் தெரிவிக்கப்படும். ஏனைய அனைத்து விண்ணப்பதாரிகளும், தெரிவு நடபடியில் வந்து சேரும் விண்ணப்பங்களின் அடிப்படையில் ஆசிய பெண்கள் நிதியத்திடமிருந்து 5-10 கிழமைகளுக்குள் அறிவிக்கப்படுவார்கள். ஒருவேளை விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து 5 கிழமைகளுக்குள் ஆசிய பெண்கள் நிதியத்திடமிருந்து எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை எனின், தயவு செய்து grants@wf-asia.org என்ற மின்னஞ்சலுக்கு அறியத் தரவும்.

http://www.womensfundasia.org/index.php?r=whatWeDo/leadingfromtheSouth